Registered as a News Paper    மக்கள் 24    விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    PEOPLES DAILY    மக்கள் தினசரி

நாதம்: 02    திருவள்ளுவர் ஆண்டு 2022    புரட்டாதி 14    ( 30 - 09 - 1991 )    திங்கட்கிழமை    ஓசை: 224

## இராணுவப் பாவனைக்கு சைரனில்லாத அம்புலன்ஸ்

மணலாறு மோதலில் காயமடைந்த சிறிலங்கா இராணுவத்தினரை இரத்மலானை விமான நிலையத்திலிருந்து கொழும்பு ஆஸ்பத்திரிக்கு 'சைரன்' இல்லாத அம்புலன்ஸ் மூலம் ஏற்றிச் சென்றதாக அங்கிருந்துவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதுவரை வடக்கு - கிழக்குப் போரில் காயமடைந்த இராணுவத்தினரின் தொகையைச் சிறிலங்கா அரச தரப்பு மிகக் குறைவாகவே வெளியிட்டு வந்தது. இவ்வேளையில் இரத்மலானையில் இருந்து ஆஸ்பத்திரி செல்லும் அம்புலன்ஸ் வண்டிகளின் எண்ணிக்கையை வைத்தே செய்தியாளர்களும் மக்களும் இராணுவ சேதத்தை கணிப்பிட்டுவந்தனர். இதனைத் தடுப்பதற்காகவே (4- ஆம் பக்கம் பார்க்க)

## ★ 'யுத்த நிறுத்தம்' தொடர்பாக பத்திரிகைகள்

# இனவாத நோக்கில் செய்திகள்

# தென்னிலங்கையில் பதற்றம்

### மறுப்பு தெரிவிப்பதில் அரசாங்கம் பகீரதப் பிரயத்தனம்

(கொழும்பு)

சிறிலங்கா பேரினவாத பத்திரிகைகள் சில நேற்றுமுன்தினம் யுத்தநிறுத்தம் தொடர்பாகவும் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் கொழும்பு வருகை பற்றியும் இனவாத நோக்கில் வெளியிட்ட சில செய்திகள் தென்னிலங்கையில் ஓர் பதற்றத்தையும் நெருக்கடியையும் தோற்றுவித்தன.

நேற்று முன்தினம் 'திஐலண்ட்' உட்பட சில பத்திரிகைகள் சிறிலங்கா ஜனாதிபதி யாழ் மாவட்ட எம்.பிக்களின் ஆதரவைப் பெறும் பொருட்டு மணலாற்றுக் காட்டுப் பகுதியில் நிகழ்ந்துகொண்டிருந்த என்ற ரீதியில் செய்திகளை வெளியிட்டிருந்தன.

இதனைத் தொடர்ந்து சிறிலங்கா அரசாங்கத்திற்கும், பாதுகாப்பு வட்டாரங்களுக்கும் மணலாற்றுப் பகுதியில் போர் நிறுத்த நடவடிக்கை வட்ட எம்.பிக்களின் கொழும்பு வருகை பற்றியும் விளக்கம் அளித்து அறிக்கைகளை வெளியிட்டன.

பத்திரிகைச்செய்திக்கு மறுப்புத் தெரிவித்து அறிக்கை வெளியிட்ட ஜனாதிபதிச்

## ஜப்பானில் புயல்; 40பேர் பலி!

(டோக்கியோ)

ஜப்பானிலுள்ள தீவொன்றில் வீசிய கடும் புயலில் சிக்கி நாற்பது பேர்வரையில் உயிரிழந்துள்ளனர். பெருமளவு வீடுகளும், மற்றும் உடைமைகளும் சேதமடைந்தன. தென் (4ஆம் பக்கம் பார்க்க)

## திட்டமிட்டவாறு சார்க் நடைபெறும்

(டில்லி)

''சார்க்'' உச்சி மாநாடு திட்டமிட்டவாறு இலங்கையில் நடைபெறும் என்று சிறிலங்கா பாராளுமன்ற சபாநாயகர் எம். எச். மொஹமட் (4ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

### சாள்ஸ், ஆதரவாளர் இருவர்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள உறணி ஆற்றுப் பகுதியில் படகு ஒன்றில் பயணம் செய்து கொண்டிருந்த வீரவேங்கையான சாள்ஸ் என்பவரும் மற்றும் விடுதலைப்புலிகளுக்கு ஆதரவான இருவர் ஆற்றில் மூழ்கியதால் வீரமரணத்தைத் தழுவிக் கொண்டார்கள்.

இவர்களுக்கு புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

## மன்னார் மாவட்டத்தில் விமானக் குண்டுவீச்சு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் உள்ள விடத்தல்தீவு, இலுப்பைக்கடவை, பண்டிவிரிச்சான் ஆகிய பகுதிகளில் சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான விமானங்கள் குண்டுவீச்சுத் தாக்குதல்களை நடத்தியுள்ளன.

இத் தாக்குதல்களில் ஒரு சிறுமி படுகாயம் அடைந்தார். சில வீடுகளும் சேதமாகியது

## கஞ்சிகுடிச்சாறு காட்டில் விமானக் குண்டு வீச்சு

## தமிழரின் ஜனாதிபதியாக நீங்கள் செயற்படவில்லை

### த. ந. கா. ஒன்றியம் பிரேமாவிற்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

தமிழ் பிரதேசத்தில் வாழ்கின்ற மக்களின் ஜனாதிபதி என்ற வகையில் தாங்கள் செயற்படவில்லை என்று மக்கள் உறுதியாக நம்புகிறார்கள்.

இவ்வாறு யாழ். மாவட்டம் தமிழர் நலன்காக்கும் ஒன்றியம் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவுக்கு அனுப்பிய கடிதம் ஒன்றில் குறிப்பிட்டுள்ளது.

(4ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலை. மாணவர்

## கஞ்சிகுடிச்சாறு காட்டில் விமானக் குண்டு வீச்சு

(கொழும்பு)
அம்பாறை மாவட்டத்திலுள்ள கஞ்சிகுடிச்சாறு காட்டுப்பகுதியில் நேற்று சிறிலங்கா விமானப்படை விமானங்கள் குண்டு வீச்சுத்தாக்குதல்களை நடத்தியுள்ளன.

மேலும் கோமாரி, பொத்துவில் பகுதிகளில் ரோந்து சென்ற படையினருக்கும் அவர்களை எதிர் கொண்ட விடுதலைப்புலிகளுக்குமிடையே பலத்த துப்பாக்கிப் பிரயோகம் இடம் பெற்றுள்ளது.

## பயணிகள் படகுமீது கடற்படை துப்பாக்கிச்சூடு

(புங்குடுதீவு)
குறிகாட்டுவான் துறையில் இருந்து சென்ற பயணிகள் படகின்மீது நயினாதீவில் இருந்து சிறிலங்கா கடற்படையினர் துப்பாக்கிச் சூடு நடாத்தியதை அடுத்து அப்படகு திரும்பி குறிகாட்டுவானுக்கே வந்து விட்டது. இச் சம்பவம் இருபத்தாறாம் திகதி வியாழக்கிழமை காலை குறிகாட்டுவானில் இருந்து பயணிகளுடன் படகு சென்ற போது நடைபெற்றது. நயினாதீவை அண்மித்த போதே படகின் மீது சூடு நடாத்தப்பட்டது ஆயினும் படகோ அதிலிருந்த பயணிகளோ எதுவித ஆபத்துமின்றி

(4ம் ஆம் பக்கம் பார்க்க)

மின்னல் தாக்குதல்

## இரண்டாவது கட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது

### - கேணல் முனசிங்கா

பெரும் யுத்தம் எதுவும் இடம்பெறவில்லையாயினும், விடுதலைப்புலிகளுக்கு எதிரான நடவடிக்கை நீடிக்கிறது என சிறிலங்கா இராணுவப் பேச்சாளரான சரத் முனசிங்கா தெரிவித்தார்.

யுத்த நிறுத்தம் எதுவும் அமுலுக்கு வரவில்லை. ராணுவம் தொடர்ந்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது

(4 ஆம் பக்கம் பார்க்க)

யாழ் மாவட்ட எம் பிக்களின் ஆதரவைப் பெறும் பொருட்டு மணலாற்றுக் காட்டுப் பகுதியில் நிகழ்ந்துகொண்டிருந்த போரை நிறுத்தி யுத்த நிறுத்தம் ஒன்றை அறிவித்தார்

லங்கா அரசாங்கத்திற்கும், பாதுகாப்பு வட்டாரங்களுக்கும் மணலாற்றுப் பகுதியில் போர் நிறுத்த நடவடிக்கை இடை நிறுத்தப்பட்டது தொடர்பாகவும். யாழ். மா

...ட்டன.

பத்திரிகைச்செய்திக்கு மறுப்புத் தெரிவித்து அறிக்கை வெளியிட்ட ஜனாதிபதிச் செயலகம் வடபகுதி பாராளு

(4ஆம் பக்கம் பார்க்க)

## செய்தி ஸ்தாபனங்கள்குறித்து ஹமில்டன் வணசிங்கா கவலை

(கொழும்பு)
விடுதலைப் புலிகளின் இடங்களை தேடிக் கண்டு பிடித்து அழிக்கும் இரண்டாவது கட்ட நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது என்று சிறிலங்கா இராணுவத் தளபதி ஹமில்டன் வணசிங்கா தெரிவித்துள்ளார்.

கடல் மார்க்கமாகவும், தரைமார்க்கமாகவும் சிறிலங்காப் படையினர் தமது மின்னல் தாக்குதல் நடவடிக்கையின் போது முல்லைத்தீவு மாவட்டத்தில் புலிகளின் முகாம்களைத் தாக்கி அழித்துள்ளார்கள் என்றும்,

ஆனால் பலபத்திரிகைகளும் சர்வதேச செய்தி ஸ்தாபனங்களும் பொய்ச் செய்திகளை வெளியிட்டிருப்பது குறித்து தமக்குக் கவலை அளித்திருப்பதாகவும் ஹமில்டன் வண

(4ஆம் பக்கம் பார்க்க)

## நிலையான தீர்வுக்கு வேறுகட்சிகள் குந்தகம் விளைவிக்கலாம்

### - தொண்டமான்

(யாழ்ப்பாணம்)
நாம் எத்தகைய சூழ் நிலையில் செயற்படுகிறோம் என்பதையும் நாம் அவதானிக்க வேண்டும். ஈழத் தமிழரின் பிரச்சினை உலகத் தமிழரின் கவனத்தை ஈர்த்துள்ளது. எனவே எமது சந்திப்பு சர்வதேச ரீதியில் விமர்சனங்களை உருவாக்கும். இன்று உருவாகியுள்ள சூழ்நிலையில் எமது சந்திப்பை பல்வேறு அரசியல் கட்சிகளும் ஒரு நிலையான தீர்வுக்கு குந்தகம் விளைவிக்கும் விதத்தில் விமர்சிக்கலாம் என்று அமைச்சர் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் கோ. மகேந்திரராசாவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் இதனைத் தெரிவித்த அமைச்சர் தொண்டமான் மேலும் இனப் பிரச்சினை தீர்வுக்கு இ.தொ.கா.முன் வைத்த யோசனைகளைப் புலிகள் கவனத்திற் கொண்டுள்ளமைக்கு வரவேற்பு தெரிவித்துள்ளார்.

மேலும் இக் கடிதத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு. கோ. மகேந்திரராசா, அமைச்சர் தொண்டமானை நேரடியாக யாழ்ப்பாணம் வருமாறு விடுத்த அழைப்பை ஏற்பது குறித்தோ, விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு தொடர்பான நேரடிப் பேச்சுக்கள் நடத்துவது பற்றியோ எதையும் அமைச்சர்தொண்டமான் குறிப்பிடவில்லை.

பல்கலை. மாணவர்

...ளது.

(4ஆம் பக்கம் பார்க்க)

## சமூக அங்கத்தவருக்கு லலித் கொள்கை பிரசுரம்

(யாழ்ப்பாணம்)
சிறிலங்கா ஜனாதிபதிக்கு எதிராக ஆளுங்கட்சியிலேயே ஏற்பட்டபிளவைத்தொடர்ந்து ஐக்கிய தேசிய கட்சியின்மூத்த அமைச்சரான லலித்அத்துலத் முதலி கோஷ்டியினர் வடக்கு கிழக்கில் உள்ளபல்கலைக்கழக மாணவர் சமூக அங்கத்தவர்களுக்கு தமது கொள்கை விளக்க துண்டுப் பிரசுரங்களை அனுப்பி வைத்துள்ளனர்.

பல்கலைக் கழக மாணவர்

(4ஆம் பக்கம் பார்க்க)

## பெரும் மோசடியில் சர்வோதய அமைப்பு

சிறிலங்காவில் மிகப் பெரிய மனிதநேய அமைப்பு என்று அழைக்கப்படும் சர்வோதயம் மனிதாபிமானமற்ற பெரிய ஊழல்களைச் செய்து வந்துள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

அநாதைக் குழந்தைகளைப் பராமரிப்பதாகக் கூறி வெளிநாட்டுத் தம்பதிகளுக்கு அக்குழந்தைகளை மிகப் பெரிய தொகைப் பணத்துக்கு விற்கப்படுவது இப்பொழுது வெளிவந்துள்ளது.

இந்தக் குழந்தைகள் வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கும் ஒல்லாந்து நிறுவனமான ப்ளாஸ் மேற்கு ஜெர்மன் பத்

(4ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் மூன்று நிபந்தனை சண்டே ஒப்சேவர் செய்தி

(கொழும்பு)
இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்காக சுற்றுலா மற்றும் கிராமியக் கைத்தொழில்துறை அமைச்சர் தொண்டமானுடன் பேச்சு வார்த்தை நடத்துவதற்காக விடுதலைப் புலிகள் மூன்று நிபந்தனைகளை விதித்திருப்பதாக கொழும்பிலிருந்து வெளியாகும் சண்டே ஒப்சேவர் பத்திரிகை செய்திவெளியிட்டுள்ளது.

அச் செய்தியில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது தமிழர்களின் சுயாட்சி உரிமை அங்கீகரிக்கப்படவேண்டும்,

(4ஆம் பக்கம் பார்க்க)

## நாகையில் - கோடிக்கரை வரை பாதுகாப்பு மண்டலமாக பிரகடனம்

(சென்னை)
நாகைப்பட்டினத்திலிருந்து கோடிக்கரை வரையான கரையோரப் பகுதிகள் அதிக பாதுகாப்புக்குரிய மண்டலமாக அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தமிழகக் காவல்துறை இன்ஸ்பெக்டர் ஜெனரல் தேவாரம் தெரிவித்துள்ளார்

நேற்றுமுன் தினம் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய தேவாரம் தஞ்சாவூர்க் கரையில் இருந்து இராமேஸ்வரம் வரையான 487 கிலோ மீற்றர் பகுதியும் பாதுகாப்பிற்குரிய மண்டலமாக அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரி

(4ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் மூன்று புளொட் பலி; ஆயுதங்கள் புலிகளால் மீட்பு

(வவுனியா)
வவுனியா மாவட்டத்திலுள்ள நொச்சிமோட்டை சிறிலங்கா இராணுவ முகாமிற்கும், நொச்சிமோட்டைப் பாலத்திற்கும் இடையே வைத்து நேற்றுக்காலை எட்டு நாற்பது மணியளவில் புளொட் இயக்கத்தினர் மீது புலிகளால்தாக்குதல் நடத்தப்பட்டது. இத்தாக்குதலில் புளொட் குழுவைச் சேர்ந்த மூவர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். அவர்களின் ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

விடுதலைப் புலிகளால் கைப்

(4ஆம் பக்கம் பார்க்க)

# வீதியில் குழந்தையுடன் சென்ற பெண் கொலை

(நமது நிருபர்)

நாலரை வயதுக் குழந்தையுடன் வீதிவழியே சென்று கொண்டிருந்த பெண்ணொருவர் கொலை செய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து ஒன்றரைப் பவுண் சங்கிலியும், ஆறாயிரத்து ஐந்நூறு ரூபா பணமும் கொள்ளையிடப்பட்டுள்ளது. கடந்த இருபதாம் திகதி முள்ளியவளைப் பகுதியில் நடைபெற்ற இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது முத்தையன்கட்டு இடதுகரையைச் சேர்ந்த இராஜேந்திரன் ஜெயந்தினி (28 வயது) என்பவரும் அவரது குழந்தையும் தண்ணீரூற்று பகுதியில் உறவினர் ஒருவரின் மரணச் சடங்கில் கலந்து கொள்வதற்காக இராசேந்திரன் என்பவருடன் சைக்கிளில் வந்து கொண்டிருந்தார். வழியில் சைக்கிள் பழுதடைந்தமையால் அவர் குழந்தையுடன் இறக்கி விடப்பட்டார். அதன் பின்னர் சைக்கிளில் வந்த நால்வர் குழுவொன்றுடன் முள்ளியவளையிலிருந்து நெடுங்கேணி நோக்கிச் சென்றதை சிலர் நேரில் கண்டுள்ளனர். மூன்று நாட்களாக இவர் வந்து சேராமையினால் கவலை கொண்ட உறவினர்கள் தேடுதலில் இறங்கிய போது கடந்த வெள்ளி நெடுங்கேணியிலிருந்து அரை மைல் தூரத்தில் சடலமாகக் கிடக்கக் காணப்பட்டுள்ளார். இவரது உடைமைகள் கொள்ளையிடப்பட்டிருப்பதுடன், அவர் மானபங்கப்படுத்தப்பட்டிருக்கக் கூடும் என்பதற்கான தடயங்களும் காணப்பட்டுள்ளன.

# சென்னைக்கு 2 வருடத்தில் கிருஷ்ணா நதி நீர்

## - கண்ணப்பன்

(சென்னை)

சென்னை நகருக்கு இன்னும் இரண்டு ஆண்டுகளில் கிருஷ்ணா நதித் தண்ணீரை கொண்டு வர தமிழக அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக மாநில பொதுப்பணித்துறை அமைச்சர் கண்ணப்பன் அறிவித்துள்ளார்.

கிருஷ்ணா நதித்திட்டத்திற்கென இந்த வருடம் 26 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் கடந்த வருடத்தைவிட இது 17 கோடி ரூபா அதிகம் என்றும் அவர் தெரிவித்தார்.

கர்நாடக காவிரி நீர்ப்பிரச்சினை, கேரளத்தில் கடலில் விழும் ஆற்று நீரை திசை திருப்பல், ஆந்திர கிருஷ்ணா நீர் என்று திட்டங்கள் வகுக்கப்படுகின்றன என்றும் கண்ணப்பன் தெரிவித்தார்.


## தேவை - மேடைத்தராசு

நல்ல நிலையிலுள்ள மேடைத்தராசு (Platform Balance) ஒன்று உடனடியாகத் தேவைப்படுகின்றது. கைவசம் வைத்திருப்போர் விலை மற்றும் விபரங்களுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

பொது முகாமையாளர்
பனை அபிவிருத்திச்சபை,
தேசிய விடமைப்புச்செயலகம்,
யாழ்ப்பாணம்

(B/3208)


# கூட்டுறவுச் சங்கங்கள் மக்கள் மயம்

(கொழும்பு)

கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகம் மக்கள் மயப்படுத்தப்படவுள்ளதாக கூட்டுறவுத்துறை அமைச்சர் மல்லிமாராச்சி தெரிவித்துள்ளார்.

கூட்டுறவுத் துறையை நிர்வகிக்க கொழும்பிலிருந்து சுற்று நிருபங்கள் வெளியிடப்பட்ட காலம் தற்போது முடிவடைந்துள்ளது என்றும் புதிய சீரமைப்புத் திட்டத்தின் கீழ் கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகம் மக்கள் மயமாக்கப்படவுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.


## ஆசிரியர் தின வாழ்த்துச் செய்தி

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
தங்கும் மத்திய கல்லூரி என்றும்
மங்காது ஓங்க மாண்புறப் பணியாற்றி
இங்கெம் மான கல்வியை வழங்கும்
எங்கும் புகழ்படைத்த ஆசிரியச் சான்றோரே!
உங்கள் அரும்பணி எங்களை வழிநடத்துவதாகுக!
எங்களின் எதிர்காலம் சுதந்திரத்தாயகத்தில் மலர்க!
உங்கள் வாழ்வு இன்று போல் என்றும் பொலிக!
மத்தியின் மணிக்கொடி நித்தியம் நிலைப்பதாகுக!

உங்கள் கீழ்ப்படிவுள்ள
மத்திய கல்லூரி மாணவர்கள்

(R/1791)



## காணவில்லை

M S. சந்தையாவின் மூன்றாவது புதல்வி சிவரஞ்சி சந்தையாவை நேற்று தொடக்கம் (29-09-91) காணவில்லை. சித்த சுகவீனம் உள்ளவர். தோற்றம் - வயது 49, மெலிந்த உடம்பு. கிப்பி வெட்டு கண்டு பிடித்தவர்கள் தயவு செய்து கீழ்க்காணும் விலாசத்தில் ஒப்படைக்கவும்.

M. S. சந்தையா
(ஓய்வுபெற்ற தபாலதிபர்)
சித்தன்கேணி.

(R/1793)


# தமிழக சட்டப் பேரவையில் கச்சதீவு விவகாரம்

(சென்னை)

கச்சதீவு தொடர்பான தீர்மானம் ஒன்று வரும் சட்டப்பேரவைக் கூட்டத்தொடரில் கொண்டுவரப்படும் என்று சட்டப் பேரவைத் தலைவர் சேடப்பட்டி முத்தையா தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழன் அன்று இதனைத் தெரிவித்த அவர் ஒக்டோபர் மாதம் 4ஆம் திகதி வரை இந்தக் கூட்டத்தொடர் நீடிக்கும் என்றும் தெரிவித்தார்.

## கி. ஜேர்மனி தொழில்நகரிலிருந்து

# வெளி நாட்டவர்கள் வெளியேற்றப்படுகின்றனர்

(பேர்ன்)

கிழக்கு ஜேர்மனியின் கைத்தொழில் நகரம் ஒன்றிலிருந்து வெளிநாட்டுத் தொழிலாளர்களையும், அரசியல் புகலிடம் கோரியுள்ளவர்களையும் அதிகாரிகள் வெளியேற்ற ஆரம்பித்திருக்கிறார்கள்.

ஆபிரிக்க, ஆசிய, கிழக்கு ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த அகதிகளே இவ்வாறு வெளியேற்றப்படும் தொகுதிகளில் இடம் பெறுபவர் ஆகும்.

அகதிகளை பாதுகாக்க முடியாது என்ற காரணத்தினாலேயே இவர்களை வெளியேற்றுவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

வெளிநாட்டு அகதிகள் தங்கியிருக்கும் விடுதிகள் மீது தீ வைப்பு, குண்டு வீச்சு ஆகியவை தொடர்ச்சியாக இடம் பெற்று வந்தன.

இத் தாக்குதல்களை ஜேர்மனியப் பிரதமர் ஹெல்மட் ஹோல் கண்டித்திருக்கும் அதே நேரம் அகதிகள் சட்டத்தை கடுமையாக்குமாறும் அதிகாரிகளைக் கேட்டுள்ளார்.

இதே நேரம் வலதுசாரி இளைஞர் சங்கம் ''சகல வெளி நாட்டவரும் வெளியேறும் வரை தொடர்ந்து தாக்கப் போவதாக'' அறிவித்துள்ளது.

ஜேர்மனி ஒன்றிணைக்கப்பட்ட பின் கிழக்கு ஜேர்மனியில் வெளிநாட்டவர்களுக்கு எதிரான உணர்ச்சிகள் அதிகரித்து வருகின்றன, பெரும்பாலான அகதிகள் பொருளாதார காரணங்களுக்காகவே வருவதாக இந்த வலதுசாரி இளைஞர் சங்கம் குற்றஞ்சாட்டி வருகிறது.


## A/L 91, 92

**REVISION PAPER CLASSES**

தாவரவியல்

திரு. பொ. ஐங்கரநேசன்

ஆரம்பம்

30-9-91 (திங்கள்) காலை 8-30 மணி


## யூனிவேர்சல்

(B/3211)

கந்தர்மடம், — யாழ்ப்பாணம்.


## கணனிக் கல்வி

# 6 ஆம் மாத நினைவஞ்சலி





| லெப்டினனட் ஜான் | வீரவேங்கை பாரத் |
|---|---|
| (செபமாலை ஸ்ரான்லி பெர்னான்டோ) | (செபமாலை கியோமர் பெர்னான்டோ) |
| வீரஜனனம்: 1973-12-18 | வீரஜனனம்: 1971-04 25 |
| வீரமரணம்: 1991-03-30 | வீரமரணம்: 1989-10 05 |

தாய்மண்ணை மீட்பதற்கோ
புறப்பட்டாய் — பாரத்
தனயன் உன்பாதை சுவடுகளில்
தடம்பதித்தாய்.
தம்பியவன் ஜானும்
மண்மீட்பு முடியுமுன்னே
மாவீரர் ஆனீர்களோ
மங்காத இடம் பிடித்தீர்களோ?
பருவ வயதில் பல நூறு ஆசைகள்
எண்ணி இருந்த எத்தனை கனவுகள்
கண்ணில் நீர் வழியும் கற்பனைக் கோபுரங்கள்
எல்லாம் சிதைந்தாலும் எங்கள் உயிர்
வாழ்வதும் இருப்பதும் உங்களின்
நினைவாலேயே !

நி வே. பொ. இ. வீதி,
முல்லைத்தீவு.

(B/3204)

தாய், தந்தை,
சகோதரர்கள்.

## கணனிக் கல்வி

*Diploma in Data Processing
and Computer Programming
in Basic Language
d BaseIII+ Lotus 1-2-3
Word Processing*

ஆகிய வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

ஆரம்பம்: 01. 10. 1991 (10. 30 A.M)

மேலதிக விபரங்களுக்கு:

**யுனிக்கோ**

**கணனி கல்வி நிலையம்**

**UNIKCO COMPUTER CENTRE**

No. 37, Clock Tower Road, Jaffna.

(B/3218)

## கண்ணீர் நினைவஞ்சலி

அமரர்

**திரு. நாகமுத்து மாணிக்க இடைக்காடர்**

M.A (cantab), M.Sc. (London), F.S.S (London)
Statistician of F.A.O (of U.N)

எம் நாட்டின் தலைசிறந்த கல்விமானும் அரிய பணியாளரும் சமய பக்தரும் உள் நாட்டிலும் வெளி நாட்டிலும் பல உயர் பதவிகளை வகித்து நாட்டிற்கும் பிறந்த மண்ணிற்கும் பெருமை தேடித்தந்தவருமான திரு. நா. மாணிக்க இடைக்காடர் அவர்கள் 24-09-1991 அன்று அமரத்துவம் எய்தினார்.

அன்னார் எமது ஊர்ப் பொது ஸ்தாபனங்கள் பலவற்றின் மேல்தரு காப்பாளனாக இருந்து ஊரின் மேம்பாட்டிற்கு அரும்பெரும் தொண்டாற்றினார்.

அன்னாருக்கு இதய பூர்வமான எமது அஞ்சலியை செலுத்துவதுடன் அவரின் ஆத்ம ஈடேற்றத்திற்காகப் பிரார்த்திக்கின்றோம்.

- இடைக்காடு சனசமூக நிலையம்
- இடைக்காடு கலைமகள் சனசமூக நிலையம்
- இடைக்காடு கிராம அபிவிருத்திச் சங்கம்

(R-1792)

# நினைவு கூருகின்றோம்...

**1991 - 09 - 30**

1987 ஆம் ஆண்டு இதேதினத்தில் திருக்கோண மலையில் சிறிலங்காப் படையினரால் வெட்டிக் கொலைப்பட்ட 2 தமிழர்கள்

1988 ஆம் ஆண்டு சிகவமடு - கல்மடு பகுதியில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரமரண மெய்திய

சுதா (சுப்பிரமணியம் திருச்செல்வம் - குமரபுரம், கிளிநொச்சி)

1989 ஆம் ஆண்டு வீரமரணமெய்திய

கனகலிங்கம் குணசேகரம் (கலட்டி)

1990 ஆம் ஆண்டு ஊர்காவற்றுறையில் நிலை கொண்டுள்ள சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய

சரத்பாபு (சுந்தரலிங்கம் சுந்தரகுமார் - துன்னாலை வடக்கு, கரவெட்டி)

அக்கரைப்பற்றில் சிறிலங்காப் படையினரால் கைது செய்யப்பட்டு முகாமில் வைத்துச் சுட்டுக் கொல்லப் பட்ட 2 தமிழர்கள்

40 ஆம் கட்டை சிறிலங்கா அதிரடிப்படை முகாம் பகுதிக் கடலோரம் சடலங்களாக கரையொதுங்கிய 4 தமிழர்கள்

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

**- விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி**

(B/3214)

✵ சிந்தனைக்கு ✵

செயல் மறக்கப்படலாம்; ஆனால், அதன் விளைவு தொடர்கிறது.

— ஓவிட்

ஈழநாதம்

31, மகேந்திராவிதி, யாழ்ப்பாணம், 30-09-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025 - 2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 05


# முரணான செய்திகளால் வெளிப்படும் உண்மைகள்

மணலாறு - முல்லைத்தீவு காட்டுப்பகுதியில் ஒரு மாதகாலமாக நடைபெற்று வந்த உக்கிரமான போர் முடிவடைந்துள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை மணலாறு- முல்லைத்தீவுக் காட்டுப்பகுதியில் நடைபெற்ற போர் இடை நிறுத்தப்பட்டதாக சிறிலங்கா இராணுவ வட்டாரங்கள் அறிவித்தன.

முல்லைத்தீவு - மணலாறு காட்டுப்பகுதியில் உள்ள சுமார் 15 புலிகளின் முகாம்களைத் தேடி அழித்து, அப்பகுதியில் இருந்து புலிகளை விரட்டியடித்தலே இந்த இராணுவ நடவடிக்கைக்கு காரணம் என முதலில் அறிவிக்கப்பட்டது. இத்தாக்குதல் நடவடிக்கையை 'மின்னல் தாக்குதல்' 'மிகப் பெரும் காட்டுப் போர்' என வர்ணித்த சிறிலங்கா இராணுவத்தரப்பு தனது முப் படைகளின் பலத்தையும் முழுமையாகப் பயன்படுத்தி இத்தாக்குதலை மேற்கொண்டது. சிறிலங்கா இராணுவப் பேச்சாளர் கேணல் முனசிங்கவே இதனைப் பத்திரிகையாளரிடம் தெரிவித்தார்.

அவர் தெரிவித்தது போன்றே பெரும் எடுப்பிலான குண்டுவீச்சுத் தாக்குதலும், எறிகணை, பீரங்கித் தாக்குதல்களும் இடம்பெற்றன. சிறிலங்கா விமானப் படை வீசிய நேபாம் குண்டுகளினால் காடுகளே பலமணி நேரம் தீப்பற்றி எரிந்தன பல சதுர மைல் காடுகள் நாசமாயின.

ஆனால், இவற்றின் மத்தியிலும் சளைக்காது விடுதலைப்புலிகள் பேரிட்டனர் அணி அணியாகச் சென்று மோதினர். பெரிய குண்டு வீச்சின் மத்தியிலும் புலிகளின் உக்கிரமான அக்குதல்கள் இராணுவதரப்பில் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. இந்த ஒருமாதப் போரில் 200 புலிகள்வரை வீரமரணமடைந்தனர். 500 பேர்வரை காயமடைந்தனர்.

சிறிலங்கா இராணுவத்தரப்பு பலத்த சேதமடைந்தது ஐந்து அதிகாரிகள் உட்பட பெருமளவு இராணு

# "கடலில் குதிக்கச் சொன்னார்கள் குதிக்காதோரை தூக்கி வீசினார்"

வியாழக்கிழமை 19 ஆம் திகதி மாலை ஐந்து மணி.

இராமநாதபுரம் — இராமேஸ்வர மாவட்டத்தைச் சேர்ந்த இருபத்திநான்கு மீனவர்கள் ஐந்து படகுகளில் கச்சதீவுக்கு அருகாமையில் நிஜமாகவே ஆபத்தான கடல் பிராந்தியத்தில் இறால் வலை இழுத்துக் கொண்டிருந்தார்கள். துணிச்சல் மிகுந்ததான தொழில் ஆபத்து மிகுந்ததாக ஆயிருக்கிறது. இரவு 9-30 மணியளவில் திடீரென்று கடலில் வெளிச்சமின்றித் தோன்றிய படகொன்று மீன்பிடி ரோலர்களை நெருங்கியது. அது சிறிலங்கா கடற்படைப்படகு என்று புரிய சில வினாடிகள் பிடித்தன.

கொஞ்சம் உடல் நடுங்கத்தான் செய்தது, கடற்படையினரின் அச்சுறுத்தலில் உடல் நடுங்கியது என்று சொல்லும் இராமேஸ்வரம் இராமதீர்த்தத்தைச் சேர்ந்த நாகலிங்கம் தில்லைமுத்து, ''எம் ஜி ஆர் சொன்னதுதான் செயற்படுகிறது என்று சொல்றாங்கள் என்ன செய்கிறாங்களோ தெரியல்லை, இந்த மாதிரிச் சம்பவம் நடக்காமல் செல்வி ஜெயலலிதாவும் இந்திய அரசாங்கமும் பாதுகாக்க வேணும் இவங்க (புலிகள்) எவ்வளவு மீனவரைக் காப்பாற்றியிருக்கிறாங்க'' என்றார்.

கடற்படைப்படகு 45 அடி நீட்டிருக்கும், மேல் தட்டில் ஏத்தும் போது ஏழு பேர் இருந்தாங்க கீழ் தட்டில் எவ்வளவு பேர் இருந்தாங்க என்று தெரியாது. எங்க படகுகளின் மீது 'பட் பட்' என்று சுட்டாங்க. உயிரைப் பிடிச்சுக் கொள்ள ஆசைப்பட்டு எச்சரிக்கையாக படகைத் திருப்பிக் கொண்டு ஓடினோம் வழிமறித்து துப்பாக்கியைக் காட்டி மிரட்டி அவங்க படகிலே ஏற்றிக் கொண்டாங்க. நெடுந்தீவுக்கரையை அண்டிய தும் கடலினுள் பாயச் சொன்னாங்க. கரைக்கு ஐந்து மைல் இருக்கும். சுமாராக நீந்தக் கூடியவங்க பாஞ்சாங்க. மற்றவர்களை அடித்துக் கடலில் தூக்கி வீசினாங்க. நெடுந்தீவு கரையை நோக்கி வந்தோம். கரையில் கட்டியிருந்த படகு ஒன்றை அவிழ்த்து மற்றவர்களையும் ஏற்றி வந்து கரையடைந்தோம். மூன்று பேரைக் காணவில்லை என்று குறிப்பிடுகிறார் நாகலிங்கம் தில்லை முத்து.

ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுத் தேறி வருகிறார். மற்றும் இருபது பேர்களின் முகபாவம் அப்பட்டமாகக் குழப்பமாக இருந்தது. இரண்டு ஆண் குழந்தைகளின் தந்தை பாண்டி (வயது 38) மூன்று குழந்தைகளின் தந்தை கறுப்புசாமி (வயது35) மூன்று குழந்தைகளின் தந்தை கட்டையன் மகன் கோவிந்தராஜன் ஆகிய தமது சகபாடிகளைக் காணவில்லை என்கிறார்கள். மூவரையும் கடல் கொண்டிருக்கலாம் என்ற சந்தேகம் வேறு. பரந்த கடலைப் போன்று துன்பங்களையும், துயரத்தையும் தாங்கும் மனோபாவம். இருந்தபோதிலும் இது துன்பம் நிறைந்த சம்பவம்.

★ ★ ★

முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா கச்சதீவை இந்தியாவுடன் இணைக்க வேண்டும் என்று குறிப்பிடுகிறார். அதனால்தான் என்னவோ, பல காலமாகக் கவனத்திலிருந்து ஒதுங்கியிருந்த கச்சதீவு திடீரென்று சிறிலங்காக் கடற்படையினர் ரோந்து சுற்றும் மையமாகி விட்டது. ஆயிரக்கணக்கான மீனவர்களுக்கு வாழ்வளித்து வரும் கச்சதீவும், பாக்கு நீரிணையும் இன்று பிரச்சினைக்குரிய கடற்பகுதி என்பதால், மீனவர்கள் அவர்கள் எவராயிருந்தாலும் சிறிலங்கா கடற்படையினரால் தாக்கப்படுகிறார்கள்.

போர்முனையைப்போலவே கச்சதீவும் இப்போது என்கிறார்கள் மீனவர்கள்.

ஓசைப்படாமல் கரையை அடைந்த மீனவர்களை வரவேற்று நீராகாரம் வழங்கி ஒரு ஐயா அம்மை உபசரித்ததாக மீனவர்கள் சொல்கிறார்கள் நாலு நாட்கள் அங்கு புலிகளின் பாதுகாப்பில் இருந்துவிட்டு யாழ்ப்பாணம் வந்திருக்கிறோம் என்று சொல்லும் இவர்கள் யாழ்ப்பாணத்தில் ஹோட்டல் ஒன்றில் இருக்கிறார்கள். ஹோட்டலில் இவர்களை இப்படி விருந்தாளிகளாக வைத்திருப்பவர்கள் வேறு யாருமல்ல - யாழ். பிரதேச விடுதலைப் புலிகள் அமைப்பினர்.

உபகரணங்களுடன் ஒவ்வொன்றும் ரூபா 2 இலட்சம் பெறுமதியான படகுகள் கடற்படையின்படகு வேண்டுமென்றே முட்டி மோதியதால் உடைந்து விட்டன என்றும், அவை ஓடிக் கடலில் மூழ்கியிருக்கலாம் என்றும் அங்கலாய்க்கிறார்கள்.

விபத்தின்கொடூரத்தை அவர்கள் முகங்கள் அள்ளிக்காட்டாவிட்டாலும், இறந்தவர்களின் உடன்பிறப்புக்களின் மனதில் அப்படியே உறைந்துபோயுள்ளது அவர்கள் பேச்சிலிருந்து தெரிகிறது.

இலங்கை நேவி பிடிக்கும் போது இந்திய நேவி கடலில் தூரத்தில் கிடந்தது எமக்குத் தெரியும். இராமேஸ்வரத்திற்கும் கச்சதீவுக்கும் இடையில் எங்க கரையிலேயே வந்து பிடிப்பாணுங்க. பகலிலேயே பிடித்திருக்கிறானுங்க. ஜெயலலிதா எங்களுக்கு ஒரு பாதுகாப்பும் கொடுக்கவில்லை. ஜெயலலிதா பதவிக்கு வந்த பிறகு எத்தனை தரம் அடி வாங்கினோம். பத்துப் பேருக்கு ஒரு வயர்லஸ் என்பது லைசன்ஸ் ஆயிற்று. ஒரு போட்டில் ஐந்துபேராக நாலு போட்களில் வந்தோம். நாலு பேர் வந்த போட் ஒன்றுதான் கோடியாக் கரையில் அணைகிறது கடற்படை எங்களைச் சித்திரவதை செய்தாங்கள் என்கிறார்கள் இவர்கள்.

### புலிகளின் பாதுகாப்பு

புலிகளின் பாதுகாப்பில் ஒட்டு மொத்தமாக எங்களுக்கு ஒன்றுக்கும் குறைச்சல் இல்லை. சாப்பாடு பிரமாதம். வெறும் ஜட்டியோடு வந்த எமக்கு நல்ல ஷேர்ட், சாறம் துவாய் எல்லாம் தந்திருக்கிறாங்க. ஊரைக் காட்டினாங்க. கோட்டை, நல்லூர் எல்லாம் பார்த்தோம் எல்லாம் அழிந்து போய் இருக்கிறது செஞ்சிலுவைச் சங்க வெளிநாட்டவர்கள் எம்மைவந்து பார்த்தார்கள். ஊர், பெயர் விலாசம் எல்லாம் பெற்றார்கள். எங்க வீட்டாருக்கு அறிவிப்பார்களோ? என்று கேட்கிறார்கள் அவர்கள்.

தாம் கரை அடைந்ததும் மீளவும் இந்தத் தொழிலைத் தொடர்ந்து செய்யப் போவதாக உற்சாகத்துடன் சொல்கிறார்கள். இந்த உற்சாகத்திற்கு வேறு ஒரு காரணமும் உண்டு. இதை விட்டால் தமக்கு வேறு தொழில் இல்லை என்பது இவர்கள் நிலைப்பாடு.

பேட்டிகண்டவர்

- மதன்

## 'தமிழ் ரைம்ஸ் ஆசிரியர்'

## வாயினால் மீனைக் கௌவிய

200 புலிகள்வரை வீரமரணமடைந்தனர். 500 பேர்வரை காயமடைந்தனர்.

சிறிலங்கா இராணுவத்தரப்பு பலத்த சேதமடைந்தது. ஐந்து அதிகாரிகள் உட்பட பெருமளவு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இராணுவத்தரப்பு கூறுவதைவிட இழப்பு பலமடங்கு என பி பி ஸி தெரிவித்தது. கொழும்பு ஆஸ்பத்திரிகளிலும், அநுராதபுர ஆஸ்பத்திரியிலும் பல மேலதிக வார்ட்டுகள் இராணுவத்தினருக்கு ஒதுக்கப்பட்டதில் இருந்தே அவர்களின் சேதத்தை புரிந்து கொள்ளலாம்.

புலிகளின் 15 முகாம்களைத் தேடிப் போனவர்கள் மூன்று முகாம் பகுதியில் நடந்த போருடன் தமது போரை இடை நிறுத்தியிருப்பதாக அறிவித்துள்ளனர். இராணுவ பாசையில் 'இடை நிறுத்தம்' 'பலப்படுத்தல்' என்னும் சொற் பிரயோகங்களுக்கு இராணுவம் தோல்வியைச் சந்திக்கின்றது என்பதே பொருளாகும்.

சிறிலங்கா இராணுவத்தரப்பு தெரிவிப்பது போல் போர் தமது பக்கம் சாதகம் எனில் ஏன் ஏனைய முகாம்களை நோக்கி முன்னேறவில்லை? பலவீனமடையும் புலிகளை ஒரே தடவையில் அழித்துவிட ஏன் முனையவில்லை? புலிகள் மீதுள்ள பற்றோ?

போரின் போக்கு இராணுவத்திற்கு சாதகமாக இருக்கவில்லை என்பதே உண்மை. இந்நிலையிலேயே கடந்த காலங்களில் நெருக்கடி ஏற்படும்போது அறிவிப்பது போன்று இராணுவம் போர் இடை நிறுத்தப்பட்டது என அறிவித்தது.

ஆனால், கொழும்பில் உள்ள அரசியல் சூழ்நிலை/நெருக்கடி அதாவது சந்தர்ப்பம் சூழ்நிலை இராணுவம் நேரடியாக தனது தோல்வியை ஏற்றுக்கொள்ளும் நிலையை தற்பொழுது உருவாக்கியுள்ளது.

இராணுவ நடவடிக்கை வெற்றி பெறுவதாக அறிவித்துக் கொண்டிருந்த போது திடீரென இடை நிறுத்தப்பட்டமை யாழ் மாவட்ட புதிய பாராளுமன்ற உறுப்பினர்களுடன் சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா செய்து கொண்ட இரகசிய உடன்பாடு எனப் பேரினவாதப் பத்திரிகைகளும், அரசியல்வாதிகளும் கருதின. ஆனால், யாழ். மாவட்ட எம். பிக்கள் திரு. பிரேமதாசாவைச் சந்திக்கும் முன்னரே இராணுவத்தினர் மணலாற்றில் பின்வாங்கி விட்டனர். இதனால் இராணுவத்தரப்பு உண்மையைக் கூறவேண்டிய பெரும் சிக்கலில் மாட்டிக் கொண்டுள்ளது.

தமது இராணுவ நடவடிக்கைகள் நிறுத்தத்திற்கும் அரசியலுக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை என சிறிலங்கா இராணுவத்தளபதி ஹமில்டன் வணசிங்கா உட்பட சகல அதிகாரிகளும், பாதுகாப்பு அமைச்சும் அடித்துக் கூறுகின்றனர். ஆனால் சிங்கள மக்களுக்கு நம்பிக்கை ஏற்படவில்லை.

ஆகையினால் உண்மை நிலையை உணரவைக்க மணலாற்றில் பின்வாங்கியதற்கும் / இடை நிறுத்தியதற்குக் காரணம் ஏற்பட்ட இழப்பும் தோல்வியும் என இராணுவம் எவ்வாறு பகிரங்கமாக அறிவிப்பது? அதை மக்கள் உய்த்துணர்ந்து விளங்கிக் கொள்ளவேண்டும்.

'தமிழ் ரைம்ஸ் ஆசிரியர்'

# குற்றவிசாரணை மனு மீதான லலித்தின் குற்றச்சாட்டிற்கு மறுப்பு

(லண்டன்)

சிறிலங்கா ஜனாதிபதிக்கு எதிரான தற்போதைய அரசியல் குற்றப் பிரேரணை பிரேமதாசாவின் சமாதான முயற்சியை குழப்புவதற்காக சதிகாரர்களால் கொண்டு வரப்பட்டது என்றோ அல்லது இறுதியில் விடுதலைப் புலிகள் ஜனாதிபதியை ஆதரிக்கும் என்றோ அல்லது பிரேரணைக்கு ஆதரவாகவைச்சாத்திட்ட தமிழ் எம். பிக்களுக்கு விடுதலைப்புலிகள் உரிய தண்டனை வழங்கும் என்றோ நான் ஒரு போதும் கூறியதில்லை.

இவ்வாறு "தமிழ் ரைம்ஸ்" ஆசிரியர் இராசநாயகம் லண்டனில் இருந்து விடுத்த மறுப்பு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

முன்னதாக கொழும்பில் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் முன்னாள் அமைச்சர் லலித்அத்துலத்முதலி மேற்கண்டவாறு "தமிழ் ரைம்ஸ்" ஆசிரியர் இராஜநாயகம் தெரிவித்திருந்தார் என்று குறிப்பிட்டிருந்தார்.

இதற்கு மறுப்புத் தெரிவித்தே இராஜநாயகம் மறுப்பு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையின் முழு விபரமும் வருமாறு:

பிரேமதாசாவிற்கு எதிரான பிரேரணையை ஆதரிப்பவர்கள் அல்லது எதிர்ப்பவர்கள் தெரிவிக்கும் கருத்துக்கள் சம்பந்தமாக எனது அபிப்பிராயத்தை நான் தெரிவிக்காத போதும் நான் கூறியதாக தெரிவிக்கப்பட்டிருப்பவை எவ்வித கலப்புமே இல்லாத முழுப்பொய் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

1991 செப்டம்பர் மாதம் 12 ஆம் திகதி பிரித்தானிய "றோயல் இன்டர் நாஷனல் இன்ஸ்ரிரியூட்டில்" நடந்ததாகக் கூறப்படும் எக் கூட்டத்திலும் கலந்து கொள்ளவும் இல்லை உரையாற்றவுமில்லை.

ஜனாதிபதி பிரேமதாசாவிற்கு எதிரான உத்தேச அரசியல் குற்றப் பிரேரணை இந்திய அரசினால் பணம் செலவு செய்யப்பட்டு மேற்கொள்ளப்பட்ட ஒரு சதி என்று நான் ஒரு போதும் கூறவும் இல்லை. அவ்வாறு நம்பவும் இல்லை.

'தமிழ் ரைம்ஸ்' ஒரு சுதந்திரமான சஞ்சிகை. தமிழ் ரைம்ஸ்ஸோ அல்லது நானோ விடுதலைப் புலிகளையோ அல்லது எந்தவொரு தமிழ் கட்சியையோ அல்லது எந்தவொரு போராட்டக் குழுவையோ சேர்ந்தவர்கள் அல்ல.

பகிரங்கமாகத் தெரிந்த எனது கருத்துக்களுடன் விடுதலைப் புலிகள் என்னைத் தமது பேச்சாளர்களுள் ஒருவராக கருதுமென்று நான் நம்பவில்லை ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகள் சம்பந்தமான விடயங்கள் குறித்தும் பெரும் மரணத்தையும் அழிவையும் ஏற்படுத்திய தற்போதைய இன யுத்தம் குறித்தும் நாம் பிரச்சினைகளை கிளப்பினோம்.

இன்றைய யுத்தத்திற்கு நாம் ஒரு முடிவை வலியுறுத்தி வந்துள்ளதோடு பேச்சுவார்த்தை ஊடான அரசியல் தீர்விற்கு நாம் இயக்கம் நடத்தி வந்துள்ளோம்.

"தமிழ் ரைம்ஸின்" கருத்துக்கள் குறித்தும் எனது கருத்துக்கள் எனக் கூறப்பட்டுள்ளவையும் திரிக்கப்பட்டவையே இவை சில வட்டாரங்களின் வழமையான பொழுது போக்குபோல் தெரிகிறது.

இலங்கைக்கு நான் அண்மையில் மேற்கொண்ட விஜயத்தின் போது கூட எனது கருத்துக்கள் தொடர்பாக பொய்யாக உருவாக்கப்பட்ட அறிக்கைகள் வெகுஜனத் தொடர்பு சாதனங்களில் இடம் பெற்றன.

உண்மையில் அரசியல் குற்றப் பிரேரணை தொடர்பாக என்னைச் சம்பந்தப்படுத்தும் அறிக்கை குறித்து எனது கவனம் ஈர்க்கப்பட்டபோது 1984 1985 ஆம் ஆண்டுகளில் லலித் அத்துலத் முதலி பாதுகாப்பு அமைச்சராக இருந்த போது வெளி நாடுகளின் உள்ள இலங்கை தூதரகங்களுக்கு "தமிழ் ரைம்ஸின்" பிரதிகள் எவ்வாறு அச்சிட்டு விநியோகிக்கப்பட்டன என்று நான் இப்போது நினைத்துப் பார்க்கிறேன்.

## வாயினால் மீனைக் கௌவிய மீனவர் மரணம்

(பொத்துவில்)

ஆற்றில் வலை வீசிக்கொண்டிருந்த மீனவர் ஒருவர் வலையில் அகப்பட்ட மீனொன்றை கழற்றி வாயில் கௌவிக் கொண்டு மற்றொரு மீனைக் கழற்றுவதற்காக குனிந்த போது வாயில் கௌவியிருந்த மீன் நழுவி தொண்டைக்குள் சிக்கிக்கொண்டதால் மூச்சுத் திணறி ஸ்தலத்திலேயேமரணமான சம்பவம் அண்மையில் திருக்கோயில் காஞ்சிரங்குடா என்னுமிடத்தில்நடந்துள்ளது

## விடுதலை

(பக்தாத்)

ஈராக்கினால் தடுத்துவைக்கப்பட்டிருந்த ஐ நா. வின் அணு ஆயுதக் கண்காணிப்பாளர்கள் குழுவைச் சேர்ந்த நாற்பத்துநான்கு பேரும் விடுவிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது இவர்கள் நாற்பத்துநான்கு பேரும் கடந்த ஐந்து நாட்களாக பக்தாத்தல் தடுத்துவைக்கப்பட்டிருந்தனர் என்பது தெரிந்ததே.

தமிழக சட்டசபையில்

## இலஸ்ரேற்றட் வீக்லி மீது உரிமைப் பிரச்சினை

(சென்னை)

தமிழ்நாடு சட்டப் பேரவையை இழிவு படுத்தியும், சபாநாயகரின் உத்தரவுக்கு உள்நோக்கம் கற்பித்தும் கட்டுரை வெளியிட்டதற்காக இலஸ்ரேற்றட் வீக்லி வார சஞ்சிகையின் மீது சட்டப் பேரவையில் உரிமைப் பிரச்சினை எழுப்பப்பட்டது.

எதிர்க்கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் உரிமைப் பிரச்சினையைக் கொண்டுவந்தார். முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவும், அமைச்சர் நெடுஞ்செழியனும் உரிமைப் பிரச்சினையை ஆதரித்தார்கள். இதை உரிமைக் குழுவுக்கு அனுப்பி வைப்பதாக சபாநாயகர் சேரப்பட்டி முத்தையா தெரிவித்தார்.

## தியாகி திலீபன் தடகளப் போட்டி

# முதலாம் இடத்தை தெல்லிப்பளை வென்றது

(யாழ்ப்பாணம்)

தியாகி திலீபன் ஞாபகார்த்த வட்டவைகளுக்கிடையிலான தடகள விளையாட்டு இறுதி நிகழ்ச்சிகள் நேற்று நிறைவெய்தின. பெருந்தொகையான விளையாட்டு வீரர்களும் வீராங்கனைகளும் உற்சாகத்துடன் பங்குபற்றி சிறப்பித்தனர். பார்வையாளராக ஆயிரக்கணக்கான மக்கள் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தை சூழ்ந்து நின்றனர்.

இந்த விளையாட்டுப்போட்டிகளில் தெல்லிப்பளை வட்டவை முதலாம் இடத்தை தட்டிச் சென்றுள்ளது (பெற்ற புள்ளி 93), இரண்டாம் இடத்தை யாழ்ப்பாணமும் (பெற்ற புள்ளி 58) சண்டிலிப்பாய் மூன்றாம் இடம் (பெற்ற புள்ளி 41) நல்லூர் நாலாம் இடம் (பெற்றபுள்ளி 31) பருத்தித்துறை ஐந்தாம் இடம் (பெற்ற புள்ளி 19) சங்கானை ஆறாம் இடம் (பெற்ற புள்ளி 15) கரவெட்டி ஏழாம் இடம் (பெற்ற புள்ளி 13) பளை, உடுவில் ஆகியன எட்டாம் இடம் (பெற்ற புள்ளி தலா 7) கோப்பாய் ஒன்பதாம் இடம் (பெற்ற புள்ளி 6) மருதங்கேணி பத்தாம் இடம் (பெற்ற புள்ளி 3 சாவகச்சேரி பதினோராம் இடம் (பெற்ற புள்ளி 1),

இரு நாட்களாக நடைபெற்ற இவ்விளையாட்டுப் போட்டிகளின் முடிவில் பரிசளிப்பு விழாவும், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பிரமுகர்களின் உரையும் இடம்பெற்றது. (லோ)

# ஆசிரியர்களுக்கு அரை நாள் லீவு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச ஆசிரியர் தினத்தையொட்டி வரும் ஒக்டோபர் 4 ஆம் திகதி யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த அனைத்து ஆசிரியர்களுக்கும் அரைநாள் விடுமுறை வழங்கப்படவுள்ளது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் கோரிக்கையை ஏற்று வடமாநில கல்விப் பணிப்பாளர் இந்த விடுமுறையை வழங்கியுள்ளார் என்று சங்கத்தின் பொதுச் செயலாளர் த. மகாசிவத்தின் பத்திரிகைச் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது

ஒக்டோபர் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு. ப. 11·00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறும் விழாவில் ஆசிரியர்கள் பங்கு கொள்ளும் முகமாகவே இந்த விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

இவ் விழாவில் பல பிரமுகர்கள் கலந்து கொண்டு உரை நிகழ்த்துவதோடு கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

# செய்திப் பரிமாற்றல் மரதனோட்டப்போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

ஆசிரியர்தினத்தைக் கொண்டாடுமுகமாக யாழ். மாவட்டத்தில் உள்ள 51 கோட்டங்களுக்கிடையிலான செய்திப் பரிமாற்றல் [illegible]தனோட்டப் போட்டிகள் ...

தொடர்ந்து கவிதை, கட்டுரைப் போட்டிகளும், கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன. இறுதிநாள் நிகழ்ச்சியாக எதிர்வரும் ஆறாம் திகதி மாவட்ட ரீதியிலான நிகழ்ச்சி ...

# பதிவுத்திகதி பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தில் வெளிவாரிப் பட்டப்படிப்புக்கான பதிவுகளைச் செய்யும் இறுதித் திகதி வரும் ஒக்டோபர் 12-ஆம் திகதிக்குப் பின் போடப்பட்டுள்ளது.

முன்னதாக மேற்படி கற்கை நெறிக்குப் பதிவு செய்யும் இறுதித் திகதி இம்மாதம் 30-ஆம் திகதி என அறிவிக்கப்பட்டிருந்தது.

# புனர்வாழ்வு நெறிப்படுத்தல் மாநாடு

(கொழும்பு)

வடகிழக்கு மாகாண புனர்வாழ்வு நெறிப்படுத்தல் மாநாடு குழு எதிர்வரும் ஒக்டோபர் 5 ஆம் திகதி வவுனியாவில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# மோதிரத்தைப் பெறவும்

நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயிலுக்கு சமீபமாக ஒரு குழந்தையின் தங்க மோதிரம் கண்டெடுக்கப்பட்டு எமது அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் அலுவலக நேரத்தில் நேரில் வந்து அடையாளம் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம்.

---

செய்தி

சிங்கா தெரிவித்தார்.

இராணுவத்தினரின் தன்னம்பிக்கையையும் ஒழுக்க உணர்வையும் பாதிக்கும் வகையில் இச் செய்திகள் அமைந்திருந்தன என்றும் அவர் தெரிவித்தார்.

சிறிலங்கா இராணுவத்தினர் விடுதலைப் புலிகளுக்கு எதிரான தமது நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொள்கிறார்கள். இதற்கு ஏற்ப வவுனியாவில் செட்டிக்குளம் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் மன்னார்த்தீவு ...

## ஜனாதிபதி பதவியை நீக்குவது

# ஊசி முனைக் காதுக்குள் ஒட்டகத்தை புகுத்துவதுபோல்

-வாசுதேவ நாணயக்கார

(கொழும்பு)

''இன்றைய அரசியல் அமைப்பின் பிரகாரம் ஜனாதிபதியை பதவியிலிருந்து இறங்குவதற்கு கிடைத்திருக்கும் சந்தர்ப்பத்தினை நிறைவேற்றுவதானது ஊசிமுனைக் காதுக்குள் ஒட்டகத்தை செலுத்துவது போன்ற கடினமான செயலாகும்''

இவ்வாறுநவசமசமாஜக்கட்சியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார பொதுக் கூட்டமொன்றில் பேசிய போது தெரிவித்தார், தொடர்ந்து பேசிய அவர் சர்வாதிகார ஆட்சியை ஏற்படுத்தும் நோக்கில் உருவாக்கப்பட்ட இந்த அரசியல் யாப்பானது கடந்த ஜனாதிபதியின் காலத்தில் இவ்வளவு தூரம் வெறுக்கத்தக்கதாக இருக்கவில்லை.

இன்று நாடு எதிர்நோக்கியுள்ள பிரச்சினை சர்வாதிகார ஆட்சி முறையினால் பல வருடகாலமாக ஏற்பட்டுள்ள பிரச்சினைகளின் குமுறல்எனக் கூறலாம்,

அரசியல் குற்றச்சாட்டு பிரேரணைக்கு முகம் கொடுத்து விவாதத்திற்கு வழியமைப்பது மட்டுமே பிரேமதாசாவிற்கு இருக்கும் ஒரே வழி. அதனைத், தவிர்ப்பதும் சட்ட விதிகளை உதவிக்கழைப்பதும் பாராளுமன்றத்தை ஒத்திப் போடுவதும் வெறும் தந்திரங்களேயாகும்.

மக்கள் மூலம் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி எனக் கூறிக்கொள்பவர் சர்வசன வாக்கெடுப்புக்கும் பாராளுமன்ற விவாதத்திற்கும் ஏன் பயப்பட வேண்டும்.

சமீபகாலத்தில் காணாமல் போயுள்ள 10,000க்கும் மேற்பட்டவர்கள் தொடர்பான பொறுப்பு, தேசிய பாதுகாப்புக்கு பொறுப்புள்ளவரான ஜனாதிபதியையே சாரும்.

தமது அதிகாரத்தின் கீழ் இராணுவம் பொலிஸ் விசேட பிரிவுகளை இயங்கச்செய்து சட்ட விரோதமான ஆணைகள் பிறப்பித்தமைக்கு ஆதாரங்கள் காட்டப்பட்டுள்ளன

2500 இலட்சம் ரூபாய்க்கு கேட்கப்பட்டிருந்த கேள்விப் பத்திரங்களைதவிர்த்து 7500 இலட்சம் ரூபாவிற்கு வெளிநாட்டு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

பாராளுமன்ற ஜனநாயகம் புதைக்கப்பட்டு தனி மனித சர்வாதிகாரம் படிப்படியாக தோற்றுவிக்கப்பட்டு வந்துள்ளமைக்கு மேலும் பல ஆதாரங்கள் உள்ளன என்று தெரிவித்தார்.

# காகிதாதி கொள்வனவு கல்வித்திணைக்களம் சிரமம்

(நல்லூர்)

யாழ். கல்வித் திணைக்களம் காகிதாதிகளைக் கொள்வனவு செய்வதில் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்குவதாக அறியப்படுகிறது.

சகல கோட்டக்கல்வி அலுவலகங்களும் காகிதாதிகள் பாவனை தொடர்பாக மிகுந்த சிக்கனத்தைக் கடைப்பிடிக்குமாறு யாழ். பிரதேசக் கல்விப் பணிப்பாளர் கோட்டக்கல்வி அதிகாரிகளுக்குக் கடிதமூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்

கடிதங்களை றோணியோ செய்யும் பொழுது மிகவும் அத்தியாவசியமானவைகளையே செய்யுமாறும் பிரதிசெய்யும்போது ஒரு பக்கம் பாவித்தகடதாசிகளையே முடிந்தளவு பயன்படுத்துமாறும் பணித்துள்ளார்.

தபால் உறைகளுக்குப் பழைய பழைய காகிதாதிகளை ஒட்டிப் பாவிக்குமாறும் பதிவுத் தபால்களுக்கு மட்டும் புதிய தபாலுறைகளைப் பாவிக்குமாறும் கேட்டுள்ளார்

தட்டச்சு பண்ணுவதற்கு மூலப் பிரதிகளுக்கு மட்டும் தட்டச்சுத்தாள்களை பயன்படுத்தி ஏனையவற்றுக்கு தேவையில்லாத படிவங்களை ...

## சிலாப நகரசபை

# தமிழ் சிற்றூழியர்களின் வீடுகளுக்கு தீ வைப்பு

(கொழும்பு)

சிலாபத்தின் நகர மையப் பகுதியில் குடியிருக்கும் நகர சபை சிற்றூழியர்களான தமிழ் மக்களின் வீடுகளை கடந்த வியாழக்கிழமை இனந்தெரியாத சிலர் தீவைத்துக் கொளுத்தினர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை அதிகாலை இடம்பெற்ற இத் தீவைப்புச் சம்பவத்தின் விளைவாக 30 குடிசைகள் எரிந்து தரைமட்டமாகின. மேலும் 30 ...

---

தமிழர்

சிறிலங்கா அரசின் இராணுவ நடவடிக்கைகளாலும் பொருளாதார தடைகளாலும் மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டும் சிறிலங்கா அரசின் கட்டுக்கோப்பில் நம்பிக்கை ...

ஆசிரியர்தின ... டாடுமுகமாக யாழ். மாவட்டத்தில் உள்ள 51 கோட்டங்களுக்கிடையிலான செய்திப் பரிமாற்றல் ... தனோட்டப் போட்டி ஒன்று இன்று நடைபெறுகின்றது.

நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன. இறுதி நாள் நிகழ்ச்சியாக எதிர்வரும் ஆறாம் திகதி மாவட்ட ரீதியிலான நிகழ்ச்சிகள் கல்வித் திணைக்களத்தில் நடைபெறவுள்ளன.

# யுனெஸ்கோவில்சேர்வதற்கு உ.த.ப.இயக்கம்விண்ணப்பம்

(பாரிஸ்)

யுனெஸ்கோவில் சேர்வதற்கு உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம் விண்ணப்பித்துள்ளது.

பாரிசில் தலைமையகத்தைக் கொண்டுள்ள ஐ.நா.வின் யுனெஸ்கோ செயலகத்திற்கு நேரடியாகச் சென்று உ. த. பண்பாட்டு இயக்கத்தின் தலைவர் இர. ந. வீரப்பனும் துணைச் செயலர் வீ. தேவகுமாரனும் இவ்வியக்கத்தினை அனைத்துலகப் பேரியக்கமாகப் பதிவு செய்ய வேண்டும் எனக் கோரியுள்ளனர்.

உ. த. பண்பாட்டு இயக்கத்தின் வரலாற்றுஆவணங்களையும் பல நாட்டுக் கிளைகளின் பதிவுச் சான்றுகளையும் அதனிடம் வழங்கியுள்ளனர்.

## பிலிப்பைன்சில் ஜனாதிபதி

# கொள்கைக்கெதிராக ஆயுதப் போராட்டம்

(மணிலா)

பிலிப்பைன்சில் உள்ள அமெரிக்க இராணுவ தளத்தை விலக்கிக்கொள்ள ஜனாதிபதி அக்கினோ முழுமையான முயற்சிகளை மேற்கொள்ள மறுப்பதையடுத்து தாம் அரசுக்கெதிரான தமது ஆயுதப் போரைத் தொடங்கியிருப்பதாகப் பிலிப்பைன்ஸ் கம்யூனிஸ்ட் போராளிகள் அறிவித்துள்ளனர்.

போராளிகள் நேற்று முன்தினம் நடத்திய இரு வெவ்வேறு தாக்குதல் சம்பவங்களில் சுமார் 26 இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டார்கள். போராளிகள் இவ்வருடம் நடத்திய தாக்குதலில் இதுவே மிகப் பெரிய தாக்குதல் எனக் கூறப்படுகிறது.

இராணுவப்

தற்பொழுது சிறிலங்கா அதிகாரிகள் சைரன் இல்லாத அம்புலன்ஸ் வண்டிகளைப் பயன்படுத்தத்தொடங்கியுள்ளனர்.

பயணிகள்

அதிஸ்டவசமாக தப்பி குறிகாட்டுவானுக்கு வந்து சேர்ந்தனர்.

சென்ற திங்கட்கிழமைமுதல் சிறிலங்கா கடற்படையினரின் கெடுபிடிகளினால் படகுச் சேவை நடைபெறாததை அடுத்து புங்குடுதீவிலும் வேறிடங்களிலும் தங்கி நின்று அவஸ்தைப்பட்ட பின்னர் சம்பவதினம் பயணம் மேற்கொண்ட மக்களுக்கே இக்கதி ஏற்பட்டது. (22)

கொள்கிறார்கள். இதற்கு ஏற்ப வவுனியாவில் செட்டிகுளம் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் மன்னார்த்தீவு தவிர்ந்த மன்னார் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டதாகவும் பாதுகாப்புக் காரணங்களுக்காக இந்த நடவடிக்கைகள் பற்றி மேலும் தகவல்களை குறிப்பிட முடியாது என்றும் ஹமில்டன் வணசிங்கா தெரிவித்தார்.

நாகையில்

வித்தார்.

தமிழகக் கடற்கரைப் பகுதிகளில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த இத்தகைய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், அத்துடன் மாநிலகாவல்துறையினர் தீவிரதேடுதல் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர் என்றும் தெரிவித்தார்.

இந்தப் பணியில் ஆயிரம் பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள்என்றும், இவர்கள் வேதாரணியத்திலிருந்து கோடிக்கரை வரையுள்ளபகுதிகளில் விடுதலைப் புலிகள் மறைத்துவைத்திருக்கும் வெடிமருந்துப் பொருள்கள், கடத்தல் பொருள்கள், டீசல், பெற்றோல் ஆகியவற்றைக் கண்டுபிடிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர் என்றும்,

நாகபட்டினம், ஆர்க்காட்டுத்துறை, கோடிக்கரை ஆகியவற்றில் உள்ள மூன்று கடற்படைப் பிரிவுகள் இப்பணியில் மாநில காவல்துறைக்கு உதவி வருகின்றன என்றும்தேவாரம் தெரிவித்தார்.

இதேநேரம்தஞ்சாவூர் தென் ஆர்க்காடு மாவட்டங்களில் தங்க வைக்கப்பட்டிருந்த 670 இலங்கைத் தமிழ் தீவிரவாதிகள் வட ஆர்க்காடு, அம்பேத்கார் மாவட்டங்களிலுள்ள நான்கு சிறப்பு முகாம்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர் என்றும் இவர்களைத் தவிர 45,000 தமிழ் அகதிகள் இங்கு தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்றும் வட ஆர்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

பொருளாதார தடைகளாலும் மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டும் சிறிலங்கா அரசின் கட்டுக்கோப்பில் நம்பிக்கை இழந்து உள்ளார்கள் என்றும் அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தின் சகல பகுதிகளிலிருந்தும் கலந்துகொண்ட பொதுச்சபை உறுப்பினர்களால் மேற்படி ஒன்றியத்தின் பொதுச் சபைக்கூட்டத்தில் இம் மகஜரை ஜனாதிபதிக்கு அனுப்புவதாக ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

ஜனாதிபதியின் கவனத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள இம் மகஜரில் மேலும் பல குறைபாடுகளும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

ஜப்பான்

கொரியாவுக்குச் சொந்தமான கப்பலொன்று இப்புயலில் சிக்கி மூழ்கியதாகவும் இதில் இருந்த நான்கு பேரைக் காணவில்லை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

புலிகள்

தமிழர்கள் தனித்தேசிய இனமாகக் கருதப்படவேண்டும், தமிழர்களின் தாயகத்தை அங்கீகரிக்க வேண்டும் என்பவையே அந்த நிபந்தனைகளாகும்.

வவுனியாவில்

பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:

- ★ ரி-81-1 ரகத்துப்பாக்கி 03
- ★ அதற்கான மகசின்கள் 13
- ★ கோல்சர்கள் 03
- ★ ஜே. ஆர். ரகக் கைக்குண்டு 01
- ★ நடுத்தர ரவைகள் 243

இரண்டாவது

என்றும்–

விடுதலைப் புலிகளுக்கு எதிரான மின்னல் தாக்குதல் நடவடிக்கையின் முதற்கட்டம் பூர்த்தியாகி விட்டது என்றும் அடுத்த கட்டத்தை ஆரம்பிப்பதற்கான திட்டம் தயாராகிறது என்றும் மூனசிங்கா தெரிவித்தார்.

காலை இடம்பெற்ற இத் தீவைப்புச் சம்பவத்தின் விளைவாக 30 குடிசைகள் எரிந்து தரைமட்டமாகின. மேலும் 30 குடிசைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இச்சம்பவத்தினால் சுமார் 200 பேர் அகதிகளாகியுள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

திட்டமிட்டவாறு

தெரிவித்துள்ளதாக இந்துஸ்தான் டைம்ஸ் தெரிவித்துள்ளது.

சார்க் உச்சி மாநாட்டை வேறு நாட்டில் நடத்தவோ அல்லது பின்போடவோ அவசியம் ஏற்படாது என்று மொஹமட் தெரிவித்ததாக இந்துஸ்தான் டைம்ஸ் தெரிவித்தது.

இனவாத

மன்ற உறுப்பினர்கள் யுத்த நிறுத்தம்பற்றிப் பேசவில்லை என வலியுறுத்தியது.

அதேவேளை பாதுகாப்பு அமைச்சு, இராணுவத்தளபதி உட்பட இராணுவ அதிகாரிகள் யுத்த நிறுத்த அறிவிப்பு எதையும் பாதுகாப்புஅமைச்சு அறிவிக்கவில்லை என வற்புறுத்த வேண்டியிருந்தது. சிறிலங்கா இராணுவத் தளபதி நேரடியாகவே தொலைக்காட்சியில் தோன்றி யுத்தநிறுத்தம் தொடர்பாக மறுப்புத் தெரிவித்தார். மேலும் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகள் மாறி மாறி மறுப்புக்களை வெளியிட்டவேளையில் அவற்றால் முரண்பாடுகளும் எழுந்தன.

இத்தகைய மாறுபாடுகளை பெரிதுபடுத்தி அரசாங்க எதிர்ப்பு என்ற போர்வையில் தமிழின எதிர்ப்பினைப்பிரதிபலிக்கத்தக்க செய்திகளைத் தென் இலங்கையின் பேரினவாதப் பத்திரிகைகள் வெளியிட்டுள்ளன. இதனையே ஐ. தே. க அதிருப்தியாளர்களும் மற்றும் எதிர்க்கட்சியினரும் பெரிதும் மிகைப்படுத்திப் பிரசாரம் செய்ய முற்பட்டுள்ளனர். அவர்கள் இதன்மூலம் அரசியல் லாபம்தேட முயன்று வருகின்றனர்.

மூலப் பிரதிகளுக்கு மட்டும் தட்டச்சுத்தாள்களை பயன்படுத்தி ஏனையவற்றுக்கு தேவையில்லாத படிவங்களை பாவிக்குமாறும் பணித்துள்ளார்.

## தற்கொலை

நோயின் உபாதை தாங்க முடியாத வயோதிபர் ஒருக்கிட்டு தற்கொலை செய்துள்ளார். இச் சம்பவம் புங்குடுதீவில் இடம் பெற்றுள்ளது. ஊரதீவுப் பகுதியைச் சேர்ந்த நா. கந்தையா (வயது75) என்பவரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டவர் ஆவார் பல காலமாக நெஞ்சு வலியினால் இவர் பீடிக்கப்பட்டிருந்தார் அதன் உபாதை தாங்க முடியாமலேயே தற்கொலை செய்து கொண்டார் என தெரிவிக்கப்பட்டது

பெரும்

திரிகையாளர் டேர் ஸ்பிஜிலுக்கு அளித்த பேட்டியில இந்த ஊழலை ஏற்றுக்கொண்டுள்ளது. சர்வோதயம் ஏன் இந்த விற்பனையால் வந்து சேரும் பணத்தைப் பெற்றுக் கொள்கின்றது என்றும் அந்த நிறுவனத்தின் பிரதிநிதி கேட்டுள்ளார்.

இந்தக் குழந்தை விற்பனை ஊழலை ஆய்வு செய்த சண்டே ஒப்சோவர் சர்வோதயம் செயற்படும் விதத்தைப் பற்றி விபரமாக ஒரு புலனாய்வுக் கட்டுரை வெளியிட்டுள்ளது.

சமூக

சமூகம் எனும் அமைப்பு முன் பொருகாலத்தில் அமைச்சர் அத்துலத் முதலியால் ஸ்தாபிக்கப்பட்ட அமைப்பாகும். இந்த அமைப்பில் அங்கத்தவர்களாக இருந்த பல்கலைக்கழக மாணவர்களுக்கே சிறிலங்கா ஜனாதிபதிக் கெதிரான துண்டுப்பிரசுரங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இப்பிரசுரங்கள் சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளிலேயே அச்சிடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 61 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 30 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது.